# 4 சுற்றாடல் ஒழுக்க நெறியும் அபிவிருத்தியும்

சுற்றாடல் ஒழுக்கம் பற்றி தற்போது எழுந்துள்ள ஆர்வம் கடந்த சில தசாப்தங்களில்ஏற்பட்டதாகவிருப்பினும் சுற்றாடலைப் புரிந்துகொண்டு, அதனை அழிய விடாது செயற்படுத்துவது மனித வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் ஏற்பட்ட ஒரு நம்பிக்கையாகும். எனினும் துரிதமான மக்கட் பெருக்கத்தின் விளைவாக ஏற்பட்ட பொருட்கள், சேவைகளினது அதிகளவான கேள்வியை பூர்த்தி செய்ய வேகமான அபிவிருத்தியை நோக்கிச் சென்றதால் சுற்றாடலுக்கு பாதகமான பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக விவசாயம், கைத்தொழில் துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியினால் ஏற்பட்ட பிரச்சினைகளால் முன்னிருந்த சூழல் சமநிலை சீர்குலைந்ததுடன் மனித வர்க்கத்தினர் மீதும் பெருமளவு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. அதனால் மனித இனத்திற்கு பாதகமான பல்வேறு விளைவுகள்உருவாகின. உதாரணமாக சூழல்மாசடைவதால் மனிதனின் சுகாதார நிலை பாதிப்படைதல், வளங்கள் குறைவடைதல், வாழ்க்கைத் தர அச்சுறுத்தல், உயிர்ப்பல்வகைமை அருகுதல், மூலிகைத் தாவரங்கள் அழிதல், காலநிலை மாற்றத்தினால் இயற்கை அழிவுகள் ஏற்படல் போன்றவற்றை குறிப்பிடலாம். அதனால் முறையான சூழல் சமநிலையை பேணுவது தொடர்பான பொறுப்பும் அக்கறையும் தேசிய, சர்வதேச மட்டங்களில் இன்று உணரப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்தின் பிரதான நோக்கம் பௌதிக மானிடத்தோற்றப்பாட்டுக் கட்டமைப்பிற்கு உதவக்கூடிய மனப்பாங்கு வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் ஒழுங்கான சூழல் சமநிலையை நிலைத்திருக்கச் செய்வதாகும். அதே போல சுற்றாடல் ஒழுக்க நெறியினைப் பின்பற்றும் தேவையை உறுதி செய்வது மட்டுமல்லாது இவ்வாறு சுற்றாடல் ஒழுக்க நெறியினைப் பேணாமையினால் எழுந்துள்ள பாதகமான விளைவுகளைப் பற்றி விளக்குதலுமாகும். நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சூழல் சமநிலையைப்பேணிச் செல்லக்கூடிய வழி முறைகளை ஆராய்வதும் பிறிதொரு விடயமாகும்.

## மனிதன் சுற்றாடலை பயன்படுத்தும் முறை

மனித வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் மனிதன் தனது தேவையை பூர்த்தி செய்தல் தொடர்பாக சூழலைப் பயன்படுத்தி வந்தமை பரம இரகசியமன்று. எனினும் அவன் சூழலை பயன்படுத்திய முறை காலத்துக்குக் காலம் வேறுபட்டுள்ளது. அச்செயன் முறைக்கான சந்தர்ப்பங்கள் மூன்றினை இங்கு இனங்காண முடியும்.

அவையாவன

அ சூழலை உள்ளவாறே பயன்படுத்தல் (உரு 4.1 )

ஆ சூழலுடன் இணைந்து செயற்படல். (உரு 4.2 )

இ சூழலை மாற்றியமைத்துப் பயன்படுத்தல். (உரு 4.3)

**அ. சூழலை உள்ளவாறே பயன்படுத்தல்**




உரு 4:1

**ஆ. சூழலுடன் இணைந்து செயற்படல்**



உரு 4:2

**இ. சூழலை மாற்றியமைத்துப் பயன்படுத்தல்**



உரு 4:3

மனிதன் சுற்றாடலைப் பயன்படுத்தும் பல்வேறு முறைகள்:

- மனிதன் நிலைத்திருப்பதற்கு அவசியமான நீர், காற்று, சூரியஒளி, வெளிச்சம் முதலானவற்றை பெற்றுக் கொள்ளல்
- உணவு, உடை, உறையுள் தொடர்பாக சூழல் வளங்களை உபயோகித்தல்
- பல்வேறுபட்ட வழிபாட்டுமுறைகள், நம்பிக்கைகள் அடிப்படையில் இயற்கைச் செல்வத்தை பயன்படுத்தல்.
- நீரைத்தேக்கி வைத்து விவசாயத்திற்குத்தேவையான நீர்ப்பாசனத் தொகுதிகளை அமைத்தல்.
- கைத்தொழில் மூலவளங்களாக கனியவளங்களை உபயோகித்தல்.
- தகனச்செயற்பாட்டிற்காக எரிபொருளையும் விறகினையும் பெற்றுக்கொள்ளல்
- ஆறுகளைப் போக்குவரத்துத்தேவைகளுக்காக பயன்படுத்தல்.
- மண், இயற்கைத் தாவரம் முதலான இயற்கை வளங்களை ஆய்விற்காகப் பயன்படுத்தல்
- மலைஉச்சிகள், ஆறுகள் போன்றவற்றை தேச எல்லைகளாகப் பயன்படுத்தல்.
- இயற்கை எழிலை பொழுது போக்கிற்காகப் பயன்படுத்தல்.

பொருளாதாரம், சமூகம், அரசியல், கலாசாரம் ஆகிய பல்வேறு நடவடிக்கைகளுக்காகவும் சூழல் பயன்படுத்தப்படுதல் இதன் மூலம் தெளிவாகிறது.

**செயற்பாடு**

1. மேலே காட்டப்பட்டுள்ள படங்கள் 4:1, 4:2, 4:3 இனை நன்கு அவதானிக்குக.
2. மனிதன் சூழலை உள்ளவாறு பயன்படுத்தல், சூழலுடன் இணைந்து செயற்படல், சூழலை மாற்றியமைத்துப் பயன்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

## ஒழுக்கநெறி


சில சமூகங்களுக்கும் கலாசாரங்களுக்குமுரிய, அங்கத்தவர்களினால் பின்பற்றப்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் என்பன ஒழுக்கநெறி என அழைக்கப்படும் இவ்வாறு நோக்கும்போது

**சூழல் ஒழுக்கநெறி** என்பது நிலம், நீர், வாயு உயிர்க்கோளம் முதலானவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்தி நிலைத்திருக்கச் செய்யும் பழக்க வழக்கங்களாகும். நல்ல கருத்துள்ள ஒழுக்கநெறியானது தனிப்பட்டவர்களின் நடத்தையுடன் இணைந்துள்ளது. இதற்கேற்ப ஒழுக்கநெறியின்படி ஒழுகுதல் என்பது அதனோடு இணைந்துள்ள நம்பிக்கை, மனப்பாங்கு, மதிப்பீடு ஆகிய பிரிவுகளிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதென்பதைக் காட்டுகிறது.

## சூழல் ஒழுக்கநெறியின் அவசியம்

மனிதனின் சூழலுடன் தொடர்புற்றகாலம் முதல் சூழல் பற்றி பல்வேறு விதங்களில் ஆராய்ந்து அறிந்துகொண்டான். புராதன மனிதன் தான் வாழ்ந்த சூழலைப் பற்றி நல்ல அறிவினைப் பெற்றிருந்தான். இதன்மூலம் நாம் அறிந்துகொள்ளக் கூடியது யாதேனில் சூழல் அழிந்துவிடாதபடி தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்கள் பழக்கப்பட்டிருந்த விதமாகும்.

**எகிப்திய மக்களால் வணங்கப்பட்ட இயற்கைப் பொருள்கள்**




(Artain) ஆடென் சூரியக் கடவுள்



(SEN) சென் - சூறாவளிக்கடவுள்



(Orisis) ஒரிசிஸ் - மரங்களுக்கு அதிபதியான கடவுள்



(Hator) ஹேட்டர் - ஆகாயத்தேவதை

உரு 4.4

அக்கால மனிதன் சூழல் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் சமய வழிபாடுகள், நம்பிக்கைகள் மூலம் பெற்றுக்கொண்டான். சமயங்கள் மூலம் சூழல் பற்றி பெருமளவு கற்றுக்கொண்டான். மரங்களுக்கு மதிப்பளித்து, பாதுகாத்து வழிபாடு செலுத்துதல் காட்டினுள் பிரவேசிக்கும் போது காட்டுத்தேவதைகளிடம் பாதுகாப்பு வேண்டி மரக்கிளைகளை வெட்டித்தொங்க விடுதல் ஆகிய பழக்கவழக்கங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. நம்பிக்கை, வழிபாடுகளுக்கு ஏற்ப சமய வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் இணைந்து காணப்பட்டமை இதற்கான காரணமாகும். உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் தோன்றிய சமயங்கள், தத்துவங்கள், நம்பிக்கைகள் சுற்றாடல் ஒழுக்கம் தொடர்பாக வெளியிட்டுள்ள விளக்கங்களை இனி ஆராய்வோம்.

அவுஸ்திரேலியாவின் “அபொறிஜின்ஸ்” பேரு நாட்டின் “இன்ஹா” இனத்தவர்கள் வடஅமெரிக்காவின் செவ்விந்தியர்கள் ஆகியோர் இயற்கை பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கைகள் பல இங்கு காட்டப்படுகின்றன

மனிதனின் பௌதிக தேவைகள் அனைத்தையும் இயற்கை வழங்கியது. இதனால் இயற்கைப் பொருள்களை இறைவனாகக் கருதி வணங்கினார்கள். சூரிய சந்திரர், மரங்கள், மிருகங்கள், மனித எலும்புகள் முதலானவற்றை வழிபட்டனர். மலைகள், மரங்கள், கற்பாறைகள், நட்சத்திரங்கள், சூரியசந்திரர் முதலான இயற்கைப் பொருள்களை அவர்களுடைய மூதாதையர்கள் என அவர்கள் நினைத்தார்கள். இதனால் அவை வணக்கத்திற்குரியனவாகக் கருதப்பட்டன.

## பௌத்த சமயம்

இயற்கையுடன் தொடர்புடைய பொருள்கள் படைக்கப்பட்டவையல்ல என்பதை ஏற்றுக்கொள்ளும் சமயமான பௌத்தத்தில் போதிக்கப்படும் விடயங்கள் பல சூழலுடன் சம்பந்தப்பட்டனவாக உள்ளன, மனிதனை இயற்கையுடன் இணைத்து இனங்காணுவதே பௌத்த தர்மமாகும். பௌத்தர்களின் நம்பிக்கையானது மனிதனைப்போலவே இயற்கையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பொருள்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் சார்ந்தும் இருப்பனவாகும். புத்தர் பெருமான் உயிர்களுக்கும் இயற்கைக்கும் மரியாதை அளிக்கவேண்டுமென்றே போதித்தார். பௌத்த தர்மம் போதிக்கும் பெருங்கருணை சூழலில் உள்ள எல்லா உயிரினங்களோடும் இணக்கப்பாட்டுடன் வாழும் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

சிங்கால என்ற பெயருடைய இளைஞனுக்கு கூறப்பட்ட அறிவுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. “தேனீ பூவிற்குப் பாதிப்பின்றி தேனை எடுப்பதுபோல தானியங்களைச் சேகரிக்கும் மனிதனுடைய செல்வம் அதிகரிக்கும்.”

“மரநிழலில் நிம்மதியாக நித்திரை செய்த ஒருவன் நித்திரை விட்டெழுந்து அதன் கிளையினை வெட்டி எறிபவனாயின் அவன் செய்நன்றி இல்லாதவன்” எனப் புத்த தர்மம் போதிக்கிறது. புத்தர் பெருமான் உருவெல என்ற இராச்சியத்திலுள்ள செனானி கிராமத்தின் இயற்கை அழகு பற்றி வர்ணிப்பதில் இருந்து சூழல் மதிப்பிற்குரிய ஒன்று என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இதன்மூலம் சுற்றாடலை பாதுகாக்க வேண்டும் என்ற செய்தியை பௌத்த சமயம் மனிதனுக்குக் கூறியுள்ளது. புத்தர் பெருமானின் பிறப்பு,ஞானம், பரி நிர்வாணம் ஆகிய அனைத்தும் இயற்கைப் பொருளான மரநிழலிலேயே இடம்பெற்றன. இதன்மூலம் இயற்கைக்கும் பௌத்தத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவாகிறது. மேற்கூறியவற்றால் சூழலுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள தொடர்பை விளங்கிக்கொள்ளலாம்.

## இந்துசமயம்

படைப்புக் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள வேத, உபநிடதங்கள்சார் இந்து சமயத்திலும் இயற்கைக்குத் தெய்வத்தன்மை கொடுக்கப்பட்டுள்ளது. இயற்கையின் அழகு மட்டுமன்றி அச்சம் தருவன அனைத்தும் கூட இறைவனின் படைப்புக்கள் என இந்துக்கள் நம்புகின்றனர்.

“பூவுலகில் உள்ள அனைத்தும் இறைவனுடையதே” உயிருள்ள, உயிரற்ற அனைத்திலும் இறைவனுடைய சக்தி வியாபித்துள்ளது. இதனால் ஒருவர் தனக்கு தேவையானதை எடுத்துக்கொண்டு மிகுதியை இறைவனுக்கு விட்டு விட வேண்டும் என இந்து சமயம் கூறுகிறது. இந்து சமய கொள்கைப்படி மரங்களினால் நிறைவேற்றப்படும் கருணை நிறைந்த செயற்பாடுகள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

மரம்



படம் 4:5

வீட்டுக்கு எரிபொருள் தருகிறது; மனிதனுக்கு நிழலைத் தருகிறது. பறவைகளுக்கு வீடாகிறது; மரப்பட்டைகள், இலைகள், வேர்கள் முதலானவை மருந்துப் பொருட்கள் ஆகின்றன.

புராதன வைதிக சமயங்கள் சூழல் வணக்கத்தினைக் கொண்டிருந்தன. மத்தியாசியாவிலிருந்து புலம்பெயர்ந்த ஆரியர் இந்தியா, பாரசீகம் முதலான நாடுகளுக்குச் சென்று குடியேறி பலதரப்பட்ட கலாசாரங்களைக் கட்டியெழுப்பியதுடன் இயற்கைப்பொருள்களுக்குத் தெய்வீகத் தன்மையையும் வழங்கினர். சூரியனுக்கும்

பூமிக்கும் அதிபதியான தெய்வங்களை வணங்குதலும் இயற்கைக்குரிய சக்தியை வர்ணனை செய்வதும் வைதிக சமயத்தின் இலட்சணமாகும். வைதிக சமயங்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இயற்கைப் பொருட்களை வழிபடலின் நோக்கம் விவசாயத்தின் மூலம் அதிகபயன் பெறுவதும், சூழலைப்பாதுகாப்பதும் ஆகும். வைதிக சமயங்கள் வீட்டு மிருகங்களை வளர்ப்பது பற்றி குறிப்பிடும் போது அவற்றை நண்பர்களாகக் கருத வேண்டும் என்கின்றன. உபநிடதங்களும் இயற்கையுடன் தொடர்புடைய பொருள்களின் இடைவினைத்தொடர்புகளை விளக்குகின்றன.

இந்தியாவின் பிரசித்தி பெற்ற தத்துவஞானியான மகாத்மா காந்தி அவர்களின் கூற்றுப்படி, அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் தன்மை இயற்கைக்கு இருக்கிறது. எனினும் எல்லோரினது ஆசைகளையும் பூர்த்தி செய்யமுடியாது. தேவையானது எது என்ற கேள்வியை எழுப்பி அதன்மூலம் அவசியமானதை மட்டும் பயன்படுத்தவேண்டும். இதனால் கருதப்படுவது யாதெனில் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழவேண்டுமானால் அவற்றை தேவையான அளவுமட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதாகும். காந்தியின் அஹிம்சை வெளிப்பாட்டுத்தத்துவமும் இதுவே.

## கிறிஸ்தவ சமயம்

படைப்புவாதத்தை ஏற்றுக்கொண்டுள்ள கிறிஸ்தவத்திலும் இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்புகள், இயற்கையால் மனிதன் பெறும் நன்மைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. இம்மதத்தின்படி இந்த உலகமும் மனிதனும் இறைவனால் படைக்கப்பட்டன. உலகிலுள்ள அனைத்துமே இறைவனின் படைப்புகளாகும் இதனால் அவரின் விருப்பப்படியே அவை அனைத்தும் இயங்குவதாக நம்பப்படுகிறது.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள படைப்புக் கதைகள், புராதன மனிதனிடம் நிலவும் சமய நம்பிக்கைகள், வழிபாடுகள், அறிஞர்களுடைய போதனைகள் என்பவற்றின் மூலம் சூழல் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறப்படுகிறது. சூழல் தொடர்பாக மனிதனுக்கு உரிய பொறுப்புக்கள், நியாயங்கள் என்பன பற்றி கிறிஸ்தவ சமயத்தில் கூறப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மனிதன் சூழலுக்கு உரிமையுடையவன் அல்ல. அவன் ஆண்டவனுக்காக சூழலைப் பேணுபவனாவான்.

> நிலம் உள்ளவரை விதைத்தலும் அறுவடையும், குளிரும் வெப்பமும், கோடையும் மாரியும், இரவும் பகலும் தொடர்ந்து நிலவும்.
>
> பரிசுத்த வேதாகமம்

இக்கூற்றில் இருந்து சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெளிப்படுகிறது

## இஸ்லாமிய சமயம்

படைப்பு வாதத்தினை ஏற்றுக்கொள்ளும் இஸ்லாம் உலகம் உட்பட சூழலில் உள்ள அனைத்தும் சர்வ வல்லமைபடைத்த அல்ஹாவின் கட்டளைப்படியே நிகழ்கிறது எனக் கூறுகிறது. சர்வ வல்லமைபடைத்த அல்ஹாவின் படைப்புகளுக்கு கௌரவம் அளித்தல், அவற்றினைப் பாதுகாத்தல், வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தல் முதலானவை இஸ்லாமியரின் கடமையாகும். அபுபக்கர் (றலி) அவர்கள் (முகமது நபியின் இறப்பின் பின்னர் இஸ்லாமியர்களின் தலைவராக விளங்கியவர்) யுத்தத்திற்குச்செல்லும் தனது சிப்பாய்களுக்கு ஞாபகப்படுத்தியவை. “தங்களுடைய உணவுக்காக அன்றி (பகைவர்களின் நாட்டில் உள்ள) மரங்களை வெட்ட வேண்டாம். விலங்குகளைக் கொல்ல வேண்டாம்.” இது தொடர்பான இன்னொரு கூற்று: (அபுபக்கர் றலி கி.பி. 7ம் நூற்றாண்டு)

மரங்களை எரிக்க வேண்டாம். தேவையற்ற விதத்தில் பிடுங்கி எறிய வேண்டாம். பெண்கள், சிறுவர், வயோதிபர் எதிர்ப்புக் காட்டாத வணக்கத்துக்குரிய மதகுருமார் ஆகியோருக்குத் துன்பம் விளைவிக்க வேண்டாம்.

(பஸ்லம் காலித் -1992)

## சின்ரோ சமயம்

ஜப்பானில் பிரசித்தபெற்ற சமயமான சின்ரோசமயம் கண்ணுக்கு தெரியாத சக்திகள் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தது. இதனால் இது சூழலுக்கு மிகவும் இசைவான (நேசமான) சமயமாகும். இயற்கைப் பொருள்களான மலைகள், ஆறுகள், தாவரங்கள் மனிதனுக்கு மிகவும் நெருக்கமானவை. எனவே அவற்றையும் மனிதனாகவே கருதவேண்டுமென்பது இச்சமயத்தினரின் கருத்தாகும். மனிதனின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக இயற்கை பல்வேறு துன்பங்களை ஏற்படுத்துவதாக ஜப்பானியர் கருதினர்.

## செவ்விந்தியர்களின் சூழல் ஒழுக்க நெறி

செவ்விந்தியத் தலைவனான சியட்டல், சூழல் ஒழுக்கம் பற்றி கூறிய கூற்று மனிதனுக்கும் சூழலுக்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்பினை எடுத்துக் காட்டுகிறது.

“இந்த பூமியில் காணப்படுகின்ற ஒவ்வொரு அங்குல நிலமும் அதன் பகுதியும் எங்கள் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.சூரிய ஒளியினால் சக்தி பெறும் தேவதாருமரங்கள், வெள்ளை மணலால் சூழப்பட்ட கடற்கரைகள், திறந்த வெளிகள், நுண்ணுயிர்கள் அனைத்தும் எமது சொத்தாகும்.” “மரங்களில்

இருந்து சொட்டும் ஒவ்வொரு நீர்த் துளியும் செவ்விந்தியரின் நினைவுத்தடங்களை மனக்கண்முன் கொண்டு வருகிறது.”

“இந்த நிலம் எங்களின் வழிபாட்டுக்குரியது. ஆறுகளும் பளிங்கு வடிவில் பாய்ந்து செல்லும் நீரும் சாதாரண நீரல்ல. எங்கள் மூதாதையரின் இரத்தமாகும். நீர் எழுப்பும் ஓசை எமது மூதாதையரின் பேச்சொலியாகும். வாசனையுள்ள மலர்கள் எமது சகோதரர்கள். மான், குதிரை, கழுகு என்பன எமது சகோதரர். வனவிலங்குகள் இல்லாத உலகம் எது? வனவிலங்குகள் இல்லையெனில் மனிதன் தனிமையில் இறந்துவிட நேரிடும். வனவிலங்குகளுக்கு நிகழ்வது யாது? அது மனிதனுக்கும் விரைவில் நிகழும். அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டே உள்ளன.”

இவ்வகையில் சூழல் தொடர்பான வேறுபட்ட நம்பிக்கைகள், சமயங்கள் தத்துவங்கள் என்பன புராதன காலம் முதல் மனிதன் சுற்றாடலை நட்புறவுடன் பேணி வந்துள்ளான் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. சிறப்பாகச் சூழலை உள்ளவாறே பயன்படுத்திய வேளையிலும் சூழலுடன் இணைந்து வாழ்ந்த சந்தர்ப்பத்திலும் இவை வெளிப்படுத்தப்பட்டதை காணலாம்.

**செயற்பாடு**

1. சூழலுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினை உங்களின் சமயத்திற்கேற்ப உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.
2. அதில் இருந்து பெறக்கூடிய தற்காலத்திற்குப் பொருத்தமான முன்மாதிரிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

தற்போது மனிதன் சூழலை அதிகளவில் பயன்படுத்தும் முயற்சியினால் சூழல்சார் ஒழுக்க நெறியினைப் பின்பற்ற வேண்டிய தேவைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கான காரணங்கள்

- மக்கட் தொகை விரைவாக அதிகரித்தலும் மனித தேவைகள் விரிவடைந்தமையும்
- கனிய வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுதல்.
- தொழில்நுட்ப வளர்ச்சி
- சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் விரிவடைந்தமை

பொதுமக்கள், தனியார் துறை, உற்பத்திக் கைத்தொழில்கள் என்பன மூலம் சூழலுக்கு ஒவ்வாத கழிவுகள் வெளியேற்றப்படுவதால் சூழல் தொகுதி பாதிக்கப்பட்டு சூழல் வாழ் உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

அபிவிருத்தியின் போது தொழிற்சாலைகள் அமைத்தல், நீர்த்தேக்கங்களை அமைத்தல் விவசாய நிலங்களை விரிவாக்கல் போன்றவற்றால் இயற்கைச்

சூழல் மாற்றமடைகின்றது. இதனால் சூழல் சமநிலை சீர்குலைகிறது. மனிதன் பல்வேறுபட்ட துன்பங்களுக்கு முகங் கொடுக்க நேரிடுகின்றது. இவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமானால் மனிதன் சூழலைத் தனது வாழ்க்கையின் ஒரு அங்கமாக கருத வேண்டும். தன்னைப் போல சூழலும் ஒரு உயிருள்ள பொருள் எனக் கருதுவதுடன் அதனுள் உயிர்ப்புள்ள செயற்பாடு இடம்பெறு-வதாகவும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். சூழல் ஒழுக்க நெறியினைப் பேணுதல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் எதிர்காலச் சந்ததியின-ருக்கு பாதுகாப்பான ஒரு சூழலை விட்டுச் செல்வதற்காகும். அதுமற்றுமன்றி ஏனைய உயிரினங்களுக்குவாழ்வதற்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்தி கொடுப்பது முக்கிய கடமையாகும்.

## சுற்றாடல் சமநிலை சீர்குலைவதால் ஏற்படும் விளைவுகள்

உலகில் குறைவான சனத்தொகை இருந்த காலத்தில் சூழலுடன் இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. இதனால் சூழல் சமநிலையினைப் பாதிக்காதவாறு அவர்களால் வாழ முடிந்தது. எனினும் சனத்தொகை துரிதமாக பெருகியதால் அவர்களது தேவைகளான உறைவிடம், வேறு நுகர்வுகள் என்பனவற்றை நிறைவேற்றிக்கொள்ள பெருமளவு கேள்வி ஏற்பட்டது. இதனால் சூழல் எமக்கு இயற்கையாக வழங்கியதை விட மேலதிகமாக சூழலில் இருந்து பெற முயன்றதால் சூழல் சமநிலை சீர்குலைந்தது. சூழல் வளங்களை அதிகளவு பயன்படுத்துவதால் தற்போது மிக சிக்கலான சூழல் பிரச்சினைகள் பல எழுந்துள்ளன. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.




உரு 4.6

செயற்பாடு


1. நீங்கள் கற்றவை, வேறுபுத்தகங்களில் தேடிப் பெற்றுக் கொண்டவை, பெரியோர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டவை என்பவற்றைக் கொண்டு மூன்று சூழல் ஒழுக்கநெறிகளை எழுதுக.
2. சூழல் ஒழுக்க நெறியைப் பின்பற்ற வேண்டியதின் அவசியம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

தற்போது 6 பில்லியனுக்கு மேற்பட்ட உலக சனத்தொகையானது புவியில் உள்ள வளங்களை மிக வேகமாகப் பயன்படுத்துகிறது. மக்கள் தமது பொருளாதார தேவைகளை இயற்கை வளங்களினூடாகப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் வளங்கள் குறைந்து செல்கின்றன. அத்துடன் சூழலுக்கு பாதகமான மனித செயற்பாடுகளினால் காலநிலை மாற்றங்களும் இடம் பெற்று வருகின்றன.

மேலே கூறப்பட்ட சூழல் பிரச்சினைகள் பெருமளவுஏற்பட அடிப்படைக் காரணம் புவி வெப்பமடைதலாகும். இதனால் எவ்வித வேறுபாடுகளுமின்றி எல்லா நாட்டு மக்களும் ஒன்றிணைந்து தீர்வு காண்பது அவசியமாகும். ஏனெனில் சூழல் வெப்பநிலை அதிகரித்தல் மனிதனுடைய நேரடிப் பங்களிப்பினை கொண்டிருக்கின்றது. வலுச்சக்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக, நிலக்கீழ் வளங்கள் அகழ்தல், பச்சை வீட்டு விளைவு, நகரமயமாதல், குப்பைகூழங்களை முறையற்ற விதத்தில் அகற்றுதல், விவசாயத்திற்கு இரசாயனங்களைப் பயன்படுத்தல், யுத்தம் முதலான விடயங்களேவெப்ப அதிகரிப்பிற்கான காரணங்களாகும்.

செயற்பாடு

பாலைவனமாதல், மின்னல், சூறாவளி, மண்சரிவு



உரு 4.7

**செயற்பாடு**

1. உரு 4.7 இனை நன்கு அவதானிக்குக.
2. இவை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தருக
3. இவ்வாறான இடர்ப்பாடுளை தவிர்ப்பதற்கும் இழிவளவாக்குவதற்கும் மேற்கொள்ள வேண்டியவற்றை விளக்குக.
4. பாடசாலை மாணவர் என்ற வகையில் சூழற் சமநிலையைப் பேணுவதன் அவசியம் பற்றி விளக்குக.

## சுற்றாடல் சமநிலையும் அபிவிருத்தியும்

அபிவிருத்தி துரிதமடைதலுடன் அதனூடாக சூழலுக்கு ஏற்படும் தாக்கம் வேகமாக இடம்பெறுகிறது. இதன் ஆரம்பம் கைத்தொழில் புரட்சியுடன் ஏற்பட்டது. இத்தகைய பாதிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ள செயன்முறைகளினால் உருவானது எனலாம்.

- துரிதமாக கனிய வளங்களை அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்
- வீதி அமைப்புகளும் போக்குவரத்து முறைகளும் வளர்ச்சியடைதல்.
- பெருமளவிலான விவசாய இரசாயனப்பயன்பாடு.
- பாரிய நீர்ப்பாசன செயற்றிட்டங்களை ஏற்படுத்தல்.
- மிகப்பாரிய அளவிலான விவசாய நிலங்கள் விரிவாக்கம் பெறல்.
- ஆறுகளுக்கு குறுக்கே அணைகட்டல்.
- மலைப்பகுதிகளிலும் சரிவுகளிலும் பயிரிடல்.

**பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்**



உரு 4:8

நாட்டினது அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இவ்வாறு செய்யப்படும் செயற்பாடுகளினால் சூழல் சமநிலைக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பது தெளிவு. அபிவிருத்தி அவசியம் என்றாலும் அது சூழல் சமநிலையைப் பாதிக்காதவாறு சூழலைப் பேணும் விதத்தில் அமைய வேண்டும்.

அபிவிருத்தி உத்திகள் நீண்டகால நன்மைகளை ஏற்படுத்தும் விதத்தில் சூழலைப் பாதிக்காத வகையில் அமையுமாயின் அவை பிரச்சினைகளை ஏற்படுத்தமாட்டா. அபிவிருத்தி செயற்பாடுகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமாயின் அதை வெற்றிகரமான விருத்தியாகக் கருத முடியாது. ஏனெனில் அவை சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாலாகும்.

அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பலவற்றின் படங்களைப் படம் 4.8இல் காணலாம். இவ்வகை அபிவிருத்திச் செயற்பாடுகளினால் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படும் பல சுற்றாடல் பிரச்சினைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- கோள வெப்பம் அதிகரித்தல்
- வரட்சி
- மண்ணரிப்பு
- மட்சரிவு
- வளிமாசடைதல்
- வெள்ளப்பெருக்கு
- கடல் நீர் மட்டம் அதிகரித்தல்
- கடும் புயல்
- நீர் மாசடைதல்
- அமிலமழை

(முக்கிய இடம்பெறுகிறது)

“மனிதன் இயற்கையின் உரிமையாளன் அல்லன்; அதன் பங்காளன் ஆவான்”. இதனால் அபிவிருத்திச் செயற்பாடு நிலைத்திருக்கும் வகையில் மனிதன் தன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

**செயற்பாடு**

1. சூழல் சமநிலை சீர் கெடுவதில் செல்வாக்குச் செலுத்தும் மனித நடவடிக்கைகளை எடுத்துக் காட்டும் விதத்தில் நீங்கள் விரும்பிய ஆக்கம் ஒன்றை தயாரிக்குக.
2. சூழல் சமநிலை பாதுகாப்பை வலியுறுத்தப் பொருத்தமான மகுடவாசகங்களைத் (சுலோகங்கள்) தயாரித்து பாடசாலையில் காட்சிப்படுத்துக.

## நிலைத்திருக்கும் அபிவிருத்தி

நிகழ்கால அவசியத் தேவைகளை நிறைவேற்றி எதிர்கால சந்ததியினர் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உரிமையை உறுதிப்படுத்தும் சூழலை உருவாக்கும் அபிவிருத்தியே நிலைத்திருக்கும் அபிவிருத்தியாகும்.

நாட்டின் பொருளாதார, சமூக விருத்தியுடன் சூழலையும் கருத்தில் கொண்டு பேணத்தக்க விதத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது நிலைத்திருக்கும் அபிவிருத்தியாகும். பண்டைய இலங்கையர் விவசாய நடவடிக்கைகளை சூழலுக்கு ஏற்றதாகக் கொண்டு சென்றனர். பிரதேசத்திற்கு பொருத்தமான முறையில் நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்தல், குளங்களைக் கட்டுதல் போன்றவை அவ்வகையிலேயே நிகழ்ந்தன.

இவற்றினால் சுற்றாடலுக்கு பெருமளவு தீங்குஏற்படுத்தப்படவில்லை. சேனைப்பயிர்ச் செய்கைக்காக பொருத்தமான விவசாய நிலங்களை பயன்படுத்தல், பின்னர் அவற்றை விட்டுவிட்டு பிறிதொரு நிலத்தினை நோக்கிச் செல்லுதல் முன்னர் பயிரிடப்பட்ட நிலம் இயற்கையின் செயற்பாட்டிற்கு மீள் உட்படுத்தப்படுதல்; ஆகிய செயற்பாடுகளினால் சூழல் சமநிலை பாதிப்பு பெருமளவு இடம் பெறுவதில்லை. சேனைப் பயிர்ச்செய்கைக்காக விவசாய நிலங்களைத் தயார்படுத்தும் போதும், இலை குழைகளை வெட்டி மரங்களை எரிக்கும் போதும் விலங்குகள் விரட்டப்பட்டன. இதனால் விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பதைக் கீழே தரப்படும் பாடலடி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"கால்கள் இல்லாதனவும் இரண்டு கால் மிருகங்களும், பறவைகளும், ஊர்வனவும் இந்த காட்டை விட்டு ஓடுக. எங்களுக்குப் பாவமில்லை. அக்கினி தேவன் சுட முன்னர் ஓடிவிடுங்கள். எங்களுக்குப் பாவம் இல்லை."

**குளம், நீர்ப்பாசனக் கால்வாய்,நீர்ப்பாசனக் கால்வாய் அமைக்கும் குழுவினர்,**



உரு 4:9

இதுபோலவே பயிர் நிலத்தில் ஒரு பகுதி பறவைகளுக்காக ஒதுக்கப்பட்டது. அந்தப்பகுதி பறவை ஒதுக்கிடம் எனப்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்டதால் விவசாய நிலத்திற்கு பாதிப்பு உண்டாக்கும் பூச்சி புழுக்கள் அழிந்ததுடன் பறவைகளினால் விவசாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்பும் மட்டுப்படுத்தப்பட்டது. குளங்களிலும் நீர்தேக்கங்களிலும நீர் மட்டத்துக்கு மேலுள்ள நீரேந்து பகுதிகளில் பயிரிடப்படுவதில்லை. இது விவசாய நடவடிக்கைகளில் உதவும் விலங்குகளுக்கு இளைப்பாறும் இடங்களாக விளங்கின.

குளத்திலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரை எடுத்துச் செல்ல கால்வாய்கள், வடிகால் தொகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் இருபக்கங்களிலும் மருத மரம் போன்ற தாவரங்கள் நாட்டப்பட்டன. இதனால் வயல் நிலங்களை நோக்கிச் செல்லும் நீரிலுள்ள கனியுப்புதன்மை தாவரங்களின் வேரினால் உறிஞ்சிக்கொள்ளப்பட்டது. இது இயற்கையாகவே நீர் தூய்மையடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழியாகும்.

பயிர்ச் செய்கையின் போது பூச்சிகளின் தொல்லையை நீக்கவும், தீங்கினை இழிவளவாக்கவும், கலப்புப்பயிர்ச் செய்கைமுறை இடம்பெற்றது. மண் வளத்தைப் பாதுகாக்க சுழல் முறை பயிர்ச் செய்கையைப் பின்பற்றுதல், பூச்சித் தொல்லைகளை தடுக்க வேப்பிலை புகைபிடித்தல், வேப்பெண்ணெய் புல்லெண்ணெய் பயன்படுத்தல், இயற்கைப்பசளை (வைக்கோல்) பயன்படுத்தல், பல்வேறு மாந்திரீக முறைகளை மேற்கொள்ளல் என்பன இடம்பெற்றன. கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்விவசாய முறைகள் சூழலுக்கு எந்த விதமான தீங்கினையும் ஏற்படுத்தவில்லை என விளங்கிக் கொள்ளலாம். இவையாவும் எமது முன்னோர் சூழல் நிலைத்திருப்பதற்காகச் சூழலுக்கு இசைவாக இருந்தமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

**செயற்பாடு**

1. சூழல் சமநிலையைப் பாதுகாத்தல் தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் சிலவற்றை குறிப்பிடுக
2. உங்கள் பிரதேசத்தில் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் மாந்திரீக முறைகள் சிலவற்றை எடுத்துக்காட்டுக.

தற்போது பரந்தளவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் சூழலைக் கருத்தில் கொள்ளாது செயற்படுத்தப்படுவதால் சூழல் சமநிலை சீர்குலையும் அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனால் சூழல் சமநிலையைப் பாதுகாக்க பெருங்கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் தேசிய, சர்வதேச மட்டங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சூழல் சமநிலையைப் பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய பொதுவான செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கைத்தொழில் அபிவிருத்தியினால் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்கான உத்திகளை பின்பற்றுதல்.
- கைத்தொழிலினால் சூழலில் சேரும் கழிவுகளை சீரான முறையில் வெளியேற்றுதல்.
- கிராம, நகர அபிவிருத்தியின் போது முறையான திட்டங்களுக்கு அமைய இடர்கள் ஏற்படாதவாறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அதிக சரிவுள்ள (குத்து) பிரதேசங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கை-களின் போது விசேட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுதல்.
- வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தல், ஆற்றோரங்களைப் பாதுகாத்தல்.

  கடற்கரையோரங்களைப் பாதுகாத்தல்.
- சதுப்புநிலங்களை நிரப்புதலையும் திறந்தவெளியாக்குதலையும் தவிர்த்தல்.
- குறித்த பிரதேசங்களுக்கு ஏற்ற விதத்தில் காலநிலை, தரையமைப்பு, மண் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்தல்.
- குறித்த சூழலுக்குப் பொருத்தமானவாறு நீர் வழங்கல், பயிர்ச்செய்கை முறைகள், பயிர் வகைகள் போன்றவற்றை அறிமுகம் செய்தல்.
- பிரதேச, நகர அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடும்போது அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களினதும் உதவியைப் பெறல்.
- அபிவிருத்தி நடவடிக்கையின் போது பொருத்தமான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் சூழல் சமநிலையைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்தல்.
- அபிவிருத்தி நடவடிக்கைகளை முகாமைப்படுத்தும் போது இடர் முகாமைத்துவம் தொடர்பாக சமுகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலும் இடர் முகாமைத்துவ செயற்றிட்டங்களை நடைமுறைப்படுததலும்.
- அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பட உறுதியளித்தல்.
- விவசாய அபிவிருத்தியின் போது விவசாய இரசாயனப் பொருட்கள், இரசாயனப் பசளைகள் என்பவற்றை இழிவளவாகப் பயன்படுத்தல்.
- இயற்கைப் பசளை உற்பத்தியையும் பயன்படுத்தலையும் ஊக்குவித்தல்.

## சர்வதேச மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட சூழல் பாதுகாப்புக் கொள்கைகள்

மனித வர்க்கத்தின் நிலைத்திருப்பை உறுதிப்படுத்துவதற்கும் நிலைத்திருக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் கோள சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் தயாரிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் நியதிக்கட்டளைகள் ஒப்பந்தம் என்பன பற்றிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அமைப்பு/ஒப்பந்தம் | - | றம்ஸா ஒப்பந்தம் |
| ஆரம்பம் | - | 1971 றம்ஸா நகரம் |
| அங்கத்துவ நாடுகள் | - | 158 (2008 வரை) |
| நோக்கம்- | | • ஈர நிலங்களின் அபிவிருத்தி<br>• ஈர நிலங்களின் முகாமைத்துவம்<br>• சர்வதேசரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த ஒரு ஈர நிலத்தை அவ்வமைப்பினுள் உள்ளடக்குதல். |

றம்ஸா ஒப்பந்தப்படி ஈரநிலங்கள் எனப்படுபவை:- அலை பெருக்குமட்டத்தில் 6 மீற்றர் வரை நீரில் மூழ்கும் கரையோரப் பகுதி மற்றும் இயற்கையாகவோ, செயற்கையாகவோ நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ தேங்கி நிற்கும் அல்லது வடிந்தோடும் நன்னீர், உவர்நீர் அல்லது இருநீரும் கலந்த சேற்று நிலங்கள், குளங்கள் நீர்த்தேக்கங்கள், நீரில் மூழ்கும் இடங்கள் கால்வாய்கள், என்பவை ஆகும். முத்துராஜவெல, புந்தல, கலமெட்டியா என்பன இலங்கையிலுள்ள ஈரநிலங்களாகும்.

**ஆண்டு தோறும் ஈரநிலங்கள் தொடர்பான சர்வதேச தினம் விசேட கருப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்டு வருகிறது.**

உயிர்ப் பல்வகைமைத்தன்மையைப் பாதுகாக்க உதவுகின்ற இந்த ஈரநிலங்களைப் பாதுகாப்பது எங்களது கடமையாகும்.

**அழிவை எதிர்நோக்கும் சூழல் தொகுதிகள்**



முருகைக்கற்கள்



கண்டல்கள்



யானைகள் சரணாலயம்



துருவக்கரடி


உரு 4:10

| | | |
|---|---|---|
| அமைப்பு /ஒப்பந்தம் | - | மொன்றியல் ஒப்பந்தம் |
| ஆரம்பம் | - | 1987 கனடாவில் உள்ள மொன்றியல் நகரம் |
| அங்கத்துவ நாடுகள் | - | 194 (2008 ஆம் ஆண்டு வரை) |
| நோக்கம் | - | • ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும் குளோரோ புளோரோ காபன் வாயுவையும் ஹீலோன் வாயுவையும் உற்பத்தி செய்தல், பயன்படுத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்தல். • 2000 ஆம் ஆண்டின் பின்னர் மேற்குறிப்பிட்ட வாயுக்களின் உற்பத்தி, பயன்பாடு முதலானவற்றை முற்றாக நிறுத்துதல். |

சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் இம் மாநாடுகளின் பயனாக ஓசோன் படையில் ஏற்பட்ட தேய்வு மீண்டும் சீராக்கப்பட்டு வருகின்றதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஓசோன் படையை பாதுகாப்பதற்காக வீட்டு மட்டத்திலேனும் தீங்கு பயக்கும் பொருட்களை எரிக்காதும் வெளியேற்றாதும் இருத்தல் எங்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

**ஓசோன்படை தேய்வடைதல்**




உரு 4:11

| | | |
|---|---|---|
| அமைப்பு / ஒப்பந்தம் | - | றியோ ஒப்பந்தம் |
| ஆரம்பம் | - | 1992 ஜுலை 3, றியோடிஜெனிரோ நகரம் (பிரேசில்) |
| அங்கத்துவ நாடுகள் | - | 172 (1992 ஆம் ஆண்டு வரை) |
| நோக்கம் | - | • குளோரோ புளோரோ காபன், ஹீலோன் வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்வதை தடுத்தல்.<br>• உயிர்ப் பல்வகைமைத் தன்மையை பாதுகாத்தல்.<br>• உயிர்ப் பல்வகைமைத் தன்மையை அழிக்கும் செயற்பாடுகளைத் தவிர்த்தல். |

றியோ ஒப்பந்தத்தின் உறுப்பினர்களான நாமும் அந்த இணக்கப்பாட்டுக்கமைய நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பது எமது கடமையாகும்.

சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பபட்ட இந்த சூழல் பாதுகாப்பு கட்டளை விதிகள், ஒப்பந்தங்களில் இலங்கையும் பிரதான அங்கத்துவ நாடாகும். இருப்பினும் பல்வேறு விதமான மனித செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் சர்வதேச பெறுமதிவாய்ந்ததும் இயற்கை அம்சங்கள் கொண்டதுமான நிலங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி சூழல் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றன. இதனால் இலங்கையில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு விசேட சூழல் ஒழுங்குவிதிகள் சட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவையாவன,

1. கரையோரப்பாதுகாப்புக்கட்டளைச்சட்டம்
2. சமுத்திரம் மாசடைதலை தடுக்கும் சட்டம்
3. வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம்
4. தேசிய மரபுரிமை வனச்சட்டம்

**அரிப்புக்குள்ளான கரையோரப்பிரதேசம்**



உரு 4.12

| | | |
|---|---|---|
| ஒழுங்கு / ஒப்பந்தம் | - | கரையோரப் பாதுகாப்புச் சட்டம் |
| ஆரம்பம் | - | 1981 |
| நோக்கம் | - | • கரையோர வலயத்தினை அளவிடல்<br>• கரையோர வளங்களை கண்டறிதல்<br>• கரையோர வலயங்களை முகாமைப்படுத்தல்<br>• கரையோர வயலத்தினுள் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும்.<br>• கரையோர வலயத்தினைப் பாதுகாத்தல் |

கரையோரப் பாதுகாப்புச் சட்ட ஒழுங்கு விதிகளை அவதானிப்பதன் மூலம் கரையோர வலயத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைக்கவும் பாதுகாக்கவும் முடியும்

**கரையோர வலயத்தின் காட்சி**



உரு 4.13

**கரையோர வலயத்திற்கு அண்மையிலுள்ள நகரக்குடியிருப்பு**



உரு 4.14

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | தேசிய மரபுரிமை வனச்சட்டம் |
| ஆரம்பம் | - | 1988 |
| நோக்கம் | - | • தேசிய மரபுரிமை வனங்களை பிரகடனப்படுத்தல்.<br>• தேசிய மரபுரிமை வனங்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும். |

**தேசிய மரபுரிமை வனங்கள்**

- தனித்துவமான இயற்கைப் பண்புகள் கொண்ட சூழல் தொகுதி
- பாரம்பரிய புவி வளங்கள் அல்லது உயிரியல் பெறுமதிமிக்க இடங்கள்
- அழிவுறும், அச்சுறுத்தலுக்குள்ளாகும் தாவரங்களும் விலங்கினங்களும் வாழும் இடம்

தேசிய மரபுரிமை வன பாதுகாப்புச்சட்டமானது தாவரங்களையும் மரங்களையும் வெட்டுதல், அரிதல், அகற்றுதல், வன சம்பந்தமான பொருட்களை சேகரித்தல், விற்பனை செய்தல், விலங்குகள் அல்லது பறவைகளை குறிப்பிட்ட வலயத்தினுள் சுடுதல் முதலான செயற்பாடுகளைத் தடைசெய்துள்ளது.

இந்த சட்டவிதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் இணங்க தேசிய மரபுரிமை வனங்களை பாதுகாப்பது எங்களது கடமையாகும்.

**இயற்கை அழகினை ரசிக்கும் சிறுமி**



உரு 4:15

**செயற்பாடு**

1. சூழல் பாதுகாப்பு தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச அமைப்புகள் ஐந்தின் பெயர் குறிப்பிடுக.
2. இலங்கையின் தாழ்நிலங்களைப் பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் மூன்றினை முன்வைக்குக.
3. i. தரப்பட்டுள்ள படங்களை நன்கு அவதானிக்குக.

   ii. இதற்கேற்ப இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இவ்வாறான நிலைமைக்குள்ளாகியுள்ள நிலங்கள் பற்றி நீங்கள் அறிந்த விடயங்களைக் குறிப்பிடுக.

   iii. ஆசிரியருடன் கலந்துரையாடி அந்நிலங்கள் பாதிப்புக்குள்ளானதன் காரணங்களைக் கண்டறிக. ஒரு பிரதேசத்தைத் தெரிவு செய்து அந்நிலத்தை புனரமைக்கக்கூடிய முறைகள் தொடர்பான ஆலோசனைகளை முன்வைக்குக.

சுரங்கத்தொழிலினால் பாதிக்கப்பட்ட நிலம்



புனரமைக்கப்படும் நிலம்



புனரமைப்பின் பின் சூழற்தொகுதி முன்பிருந்த நிலைக்குத் திரும்பும்



உரு 4:16

## மூலம்

- கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 1998 மானிடப்புவியியல் பகுதி ஒன்று (சிங்களம்)
- இலங்கையின் சுற்றாடல் எழுத்தாளர் சங்கம் 2008 Sri Lanka Environmental Journalists Association 2008 Environment and Media Vol. 1 July 2008
- இலங்கை வனபாதுகாப்பு திணைக்களம் 2008 காட்டுசெயற்றிட்டங்கள் தொடர்பான செயலமர்வுக்கு உதவும் முகமாக தயாரிக்கப்பட்ட குறிப்புகள்.
- சுற்றாடல் அமைச்சு 2006 மத்திய சுற்றாடல் அதிகார சபை
- தேசிய கல்வி நிறுவகம் 1993 கரையோரப்பாதுகாப்புச்சட்டம் ஆசிரியர் கைநூல். (சிங்களம்)
- ஈரநிலங்கள் (மத்திய சுற்றாடல் அதிகார சபை) Vol. 2
- இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு 1988 தேசிய மரபுரிமை வனப்பிரதேசச் சட்டம் இல 3 National Heritage Wilderness Area Act 1988 No. 3
- வனவள சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு 1999 ஒக்டோபர். இலங்கையின் உயிர் பல்வகைத் தன்மைகளைப் பாதுகாத்தல் செயன்முறைச் செயற்றிட்டம்.
- Ministry of Environment and Natural Resources (ND) Global Warming - a Warning to all.